முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.12.2024) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் இமையம் எழுதிய "கலைஞரின் படைப்புலகம்" புத்தகத்தை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி எஸ்.மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இணை இயக்குநர் சங்கர சரவணன், எழுத்தாளர் மற்றும் நூல் தொகுப்பாசிரியர் இமையம், ஆலோசகர் அப்பன்னசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

தி.மு.க. இளைஞர் அணி மண்டலம் 7 புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாக இளைஞர் அணி சமூக வலைதளப் பயிற்சி பாசறை கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான சு.சண்முகம் வரவேற்பில், மாநில இளைஞரணி துணைச் செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான நா.இளையராஜா துவக்கி வைத்தார். புதுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், விளாப்பட்டி ப.சிவா, நூர.அன்சாரி பாஷித் ஆகியோர் முன்னிலையில் புதுக்கோட்டை எம்.ஏ கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது. நிகழ்வில் கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் கூர்யா கிருஷ்ணமூர்த்தி, விக்னேஷ் ஆனந்த், கழக விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், கழக தொண்டர் அணி துணைச் செயலாளர் சுப.சரவணன், மாவட்ட துணைச் செயலாளர் க.மதியழகன், ஒன்றிய செயலாளர்கள் மு.க.ராமகிருஷ்ணன், ஆர்.ஆர்.சாமிநாதன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.குறிஞ்சிவாணன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, வட்ட கிளை, பாக இளைஞர் அணி பொறுப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

1.ஒரே நாடு ஒரே தேர்தல் - நாடாளுமன்றத்தில் திமுக எதிர்ப்பு! மைனாரிட்டி பாஜக இந்த மசோதாவை சட்டமாக்க முடியாது!

டி. ஆர். பாலு எம்.பி. மக்களவையில் பேச்சு

ஒரே நாடு ஒரே தேர்தல் முறையை வலியுறுத்தும் அரசியலமைப்பு 129வது சட்ட திருத்த மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக பொருளாளரும் திமுக மக்களவை குழுத்தலைவருமான டி. ஆர். பாலு எம்.பி. அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசியதாவது:

தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறியிருப்பதுபோல ஒரே நாடு ஒரே தேர்தல் முறை கூட்டாட்சிக்கு எதிரானது. ஜனநாயகத்தை அழிக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கும் இம்மசோதாவை நான் ஆதரிக்க முடியாது. ஒன்றிய பாஜக அரசிற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாத நிலையில் இந்த மசோதாவை எப்படி சட்டமாக்க முடியும்?

தொடர்ந்து ஐந்தாண்டுகள் ஆட்சி செய்வதற்காகவே வாக்காளர்கள் ஒரு அரசை தேர்தெடுக்கிறார்கள். அது வாக்காளர்களின் அடிப்படை உரிமை. ஒரே தேர்தல் முறை மூலமாக அவ்வுரிமையை இந்த மசோதா பறிக்கிறது.

ஒரே நாடு ஒரே தேர்தல் முறையில் தேர்தல் நடத்த ஒவ்வொரு முறையும் 13981 கோடி ரூபாய் அரசுக்கு கூடுதலாக செலவாகும். மேலும் 9284 கோடி ரூபாய் கூடுதல் வாக்குப்பதிவு எந்திரங்கள் வாங்க மட்டுமே செலவு செய்ய வேண்டும். இது தேவையில்லாதது.

நாடு முழுவதும் அனைத்து கட்சிகளின் கருத்து ஒற்றுமையுடன் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது நடைமுறை சாத்தியமில்லை என 2015ஆம் ஆண்டு நாடாளுமன்ற நிலைக்குழுவின் 79வது அறிக்கை முடிவு செய்திருக்கிறது என்பதை இங்கே நினைவூட்டுகிறேன்.

மேலும் ஒன்றிய அரசு நாடாளுமன்ற கூட்டுக்குழுவில் இந்த மசோதாவை முதலில் விவாதித்துவிட்டு மீண்டும் அவையில் விவாதத்திற்கு எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2. தொழில்துறை ஸ்மார்ட் சிட்டி ஆகிறதா தூத்துக்குடி?

கனிமொழி கருணாநிதி

தேசிய தொழில் வழித்தட மேம்பாட்டு திட்டத்தை (NICDP) செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்கள் குறித்து மக்களவையில் திமுக துணைப் பொதுச்செயலாளரும் தூத்துக்குடி மக்களவை உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் நகரங்களை தொழில் துறை ஸ்மார்ட் சிட்டி ஆக்குவதற்காக தேர்வு செய்யும் அளவுகோல்கள் யாவை என்றும் தூத்துக்குடி இத்திட்டத்தின்கீழ் பயன்பெற வழிவகை செய்யவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

3. மண்வளத்தை காக்க நடவடிக்கை என்ன?

ஆ. இராசா



பல்வேறு காரணங்களால் நாட்டில் 30% விவசாய நிலங்களின் வளம் பாதித்திருக்கிறது என்றும் அதை தடுப்பது மற்றும் சீர் செய்வதற்கு ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திமுக துணைப்பொதுச் செயலாளர் ஆ. இராசா மக்களவையில் பேசியுள்ளார்.

மேலும் சீரான உரங்களைப் பயன்படுத்துதல், இயற்கை வேளாண்மை மற்றும் முறையான மண் மேலாண்மை நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலம் சீரழிந்து வரும் மண்வளத்தை மீட்டெடுக்க முடியும் என அறிவுறுத்தியுள்ளார்.

4.பயனளிக்கிறதா கிராமப்புற திறன் பயிற்சி திட்டம்?

சி. என். அண்ணாதுரை

தீன்தயாள் உபாத்யாயா கிராமப்புற திறன் பயிற்சி திட்டத்தின்(DDU-GKY) கீழ் பயிற்சி பெற்று பணியில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கையை துறை வாரியாக வெளியிடுமாறு திருவண்ணாமலை தொகுதி திமுக மக்களவை உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கோரியுள்ளார். இத்திட்டத்தின்கீழ் பணியமர்த்தப்பட்ட நிரந்தர பணியாளர்கள் எத்தனை மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பணியமர்த்தப்பட்டுள்ள பெண்கள், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை விவரங்கள் ஆகிவற்றையும் வெளியிடுமாறு அவர் கேட்டுள்ளார்.

5. பண்பாட்டுச் சின்னங்களை பாதுக்காக்க நடவடிக்கை என்ன?

டி.எம். கதிர் ஆனந்த்

கடந்த ஐந்து ஆண்டுகளில் தென்னிந்தியாவில் உள்ள புராதன நினைவுச் சின்னங்களைப் போற்றிப் பாதுகாக்க, ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்த/செலவிடப்பட்ட நிதி குறித்து

நாடாளுமன்றத்தில் திமுக வின் வேலூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

தென்னிந்தியாவில் உள்ள புராதன நினைவுச் சின்னங்களைப் போற்றிப் பாதுகாக்க, ஒன்றிய அரசு போதுமான நிதியை வழங்குகிறதா?

அப்படியானால், கடந்த ஐந்தாண்டுகளில் பல்லவர்கள், சோழர்கள், இடைக்காலப் பாண்டியர்கள், சேரர்கள், நாயக்கர் வம்சத்தினர் காலத்து பழங்கால கோயில்களின் புராதன நினைவுச்சின்னம் மற்றும் வம்ச வாரியான விவரங்கள் யாவை?

இந்தப் புராதனமான பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் மற்றும் கோவில்களின் டிஜிட்டல் மேப்பிங்கிற்காக ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?

சமீபகால அறிவியல் தொழில் நுட்பமான டிஜிட்டல் தொழில் நுட்பங்களை புகுத்திட, பயன்பாடு மற்றும் நிதி ஒதுக்கீடு தொடர்பாக ஏதேனும் நிபுணர் குழுவை ஒன்றிய அரசு அமைத்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

6.கை கொடுத்ததா கடல்சார் பொருட்களின் ஏற்றுமதி?

தே.மலையரசன்

கடந்த மூன்றாண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட கடல்சார் பொருட்களின் அளவு மற்றும் மதிப்பு எவ்வளவு என கள்ளக்குறிச்சி திமுக மக்களவை உறுப்பினர் மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தியாவிலிருந்து அதிக அளவில் கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள் யாவை, புதிய சந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா, புதிதாக நிர்ணயம் செய்யப்பட்ட ஏற்றுமதி இலக்குகள் என்ன, கடல்சார் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள், இந்திய கடல்சார் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், கடல்சார் பொருட்களின் பதப்படுத்தும் திறன் மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் என்ன? கடல்சார் பொருட்கள் சர்வதேச ஏற்றுமதி தரநிலைகளை பூர்த்தி செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என அனைத்து விவரங்களையும் வெளியிடுமாறு அவர் கேட்டுள்ளார்.

துணை முதல்வரின் பிறந்தநாள் விழாவையொட்டி பாப்பிரெட்டிப்பட்டியில் மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் மருத்துவர் பழனிசாமி ஏற்பாட்டில் இலவச இதய நோய் மற்றும் புற்றுநோய் சிகிச்சை முகாமினை தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் துவக்கி வைத்தார். மருத்துவ முகாமில் காவிரி மருத்துவமனையின்இருதயம் மற்றும் புற்றுநோய் சிறப்பு மருத்துவக் குழு பொதுமக்களுக்கு பல்வேறு பரிசோதனைகளை இலவசமாக மேற்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் தலைமைச்செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன், மாநில நிர்வாகிகள் கதிரவன், சத்தியமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் சி.கிருஷ்ணகுமார்,ஒன்றிய செயலாளர்கள் முத்துக்குமார், பி.எஸ்.சரவணன் மற்றும் மருத்துவ அணி துணை அமைப்பாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தலைமை : மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ், முன்னிலை : மேயர் ந.தினேஷ்குமார்

301 பயனாளிகளுக்கு ரூ.4.41 கோடி மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், டிச. 19–

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு தினத்தையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.12.2024 அன்று சென்னை ராஜரத்தினம் மைதானத்தில் தூய்மைப் பணி யாளர்களை தொழில் முனைவோராக மாற்றும் உன்னத திட்டம் மற்றும் நவீன கழிவு நீர் அகற்றும் வாகனங்கள் வழங்கும் விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியதைத் தொடர்ந்து திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ் குமார் முன்னிலையில் 301 பயனாளிகளுக்கு ரூ.4.41 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல் விழி செல்வ ராஜ் வழங்கினர்.

திருப்பூர் மாநகராட்சி, வித்யா கார்த்திக் திருமண மண்டபத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்து ராஜ் தலைமையில், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் ஆதிதிரவிடர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டுமனை பட்டாக்களும், 10 பயனாளிகளுக்கு ரூ.0.66 இலட்சம் மதிப்பீட்டில் தையல் இயந்திரமும், தாட்கோ சார்பில் 03 பயனாளிகளுக்கு ரூ.31.34 இலட்சம் மதிப்பீட்டில் நன்னிலம் மகளிர் நில உடைமை திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகளும், முதலமைச்சரின் ஆதி திரவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார தொழில் முனைவு திட்டத்தின் கீழ் 32 பயனாளிகளுக்கு ரூ.2.06 கோடி மத்திப்பீட்டில் கடனுதவிகளும், தூய்மைப் பணி யாளர் நல வாரியத்தின் கீழ் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி பயிலும் தூய்மை பணியாளர்களின் வாரிசுதார்களுக்கு கல்வி உதவித்தொகை, இயற்கை மரண உதவித் தொகை, திருமண உதவித்தொகை, அடுக்கு மாடி குடியிருப்புக்கான ஆணைகள் என 95 பயனாளிகளுக்கு ரூ.20.26 இலட்சம் மதிப்பீட்டிலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு ரூ.72.40 மதிப்பீட்டில் இபட்டாக்களும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் இயற்கை வேளாண் பண்ணை தொகுப்பு கடன் திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்பு கடன் திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டிலும், மாவட்ட தொழில் மையம் சார்பில் அண்ணல் அம்பேத்கர் வணிக முன்னோடித் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.86.50 இலட்சம் மதிப்பீட்டிலும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கத்திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு ரூ.0.87 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 301 பயனாளிகளுக்கு ரூ.4.41 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல் விழி செல்வராஜ் வழங்கினர். பின்னர் நிகழ்ச்சியில் பங்கேற்ற தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மதிய உணவினை பரிமாறியதுடன், தூய்மைப்பணி யாளர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்கள்.

இதில் மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகராட்சி துணை ஆணையர் சுல்தானா, நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் இளங்கோ, திருப்பூர் மாநகராட்சி 1ம் மண்டலத் தலைவர் வெ.உமா மகேஷ்வரி, திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம், பல்லடம் நகர் மன்ற தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார், மாவட்ட ஆதிதிரவிடர் நல அலுவலர் புஸ்பாதேவி, தாட்கோ மேலாளர் ரஞ்சித்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

குன்னம் தொகுதி வேப்பூர் வடக்கில் நிவாரண உதவிகள் - அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்!

பெரம்பலூர்,டிச,19- பெரம்பலூர் மாவட்டம், குன்னம் தொகுதி, வேப்பூர் வடக்கு ஒன்றியம், ஓகளூர், வீரமநல்லூர், வேள்விமங்கலம் ஆகிய கிராமங்களில் மழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள, தற்காலிக நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அந்த பொதுமக்களுக்கு பாய் போர்வை , உடை உள்ளிட்டவைகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.இதில் வேப்பூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் தி.மதியழகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, வாணாபுரம் வட்டம், சூளாங்குறிச்சி மணிமுக்தா ஆற்றின் பாசன வாய்க்காலில் இருந்து பெரிய ஏரிக்கு தண்ணீர் செல்லும் வகையில் புதிய வாய்க்கால் அமைப்பது தொடர்பாக தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மற்றும் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வை மேற்கொண்டனர். இதில் அரசு அதிகாரிகள்,துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள், விவசாயிகள்,கழக நிர்வாகிகள் உட்பட பலர் உடன் உள்ளனர்.

கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி மிக கனமழையால் பாதிக்கப்பட்ட சாத்துக்கூடல் மேல்பாதி மற்றும் கீழ்பாதி கிராம பொது மக்களுக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தங்க. நாராயணசாமி நிவாரணப் பொருட்கள் வழங்கி நோய்த் தொற்று வராமல் தடுக்க மருத்துவ முகாம் நடத்தினார். உடன் விருத்தாசலம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் தி.வேல்முருகன், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் செந்தில்நாதன், கவுன்சிலர் செல்லதுரை, ஊராட்சி மன்றத் தலைவர் அமிர்தலிங்கம், கிளைச் செயலாளர்கள் அருள்மொழி, சிவக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

நாகை மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மின்சார வாரியத்தில் பணியற்றும் மின்சார ஊழியர்களுக்கு மழை அங்கிகளை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் வழங்கினார். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தினேஷ்குமார், வழக்கறிஞர் அணி தலைவர் சிங்காரவேல், துணை அமைப்பாளர்கள் செந்தில்குமார் மற்றும் வழக்கறிஞர்கள் உள்ளனர்.

சென்னை தெற்கு மாவட்டத்தில் பொதுக் கூட்டம்!

சென்னை, டிச.19 –

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ் நாடு துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1047 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொதுக்கூட்டம் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் பாடல் வெளியீட்டு நிகழ்ச்சி 16.12.2024) – திங்கட் கிழமை மாலை 6 மணிக்கு, ஈஞ்சம்பாக்கம், திருவள்ளு வர் சாலை ஈஞ்சம்பாக்கம் பெத்தேல் நகர் பகுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கா.வீ.தியாகராஜன் தலைமை வகித்தார்.

பகுதிக் கழகச் செயலாளர், 15 வது மண்டலக் குழுத் தலைவர் நீலாங்கரை வி.இ. மதியழகன் முன்னிலை வகித்தார்.

வட்டக் கழகச் செயலாளர் எஸ். கர்ணா, கி.சத்தியவேலன், விமலா கர்ணா, எஸ்.ஜானகிராமன், மா.மகேஸ்வரன், ஜி.விஜய குமார், வி.எஸ்.சுதா, எம். பாஸ்கரன், து.ராஜா, டி.தாஸ், க. குருபிரசன்னா, க.ஏகாம்பரம், கே.வி.சாந்தப்பன், எஸ்.ஆறுமுகம், கே.குமார், ஏ. கே.ஆனந்த், பி.என்.ஜோதி, டி. சீனிவாசன், இளையபெருமாள் , பி.முனுசாமி, எஸ்.கே. பாலாஜி, தி.ரேவதி தியாகராஜன், பி.வால்டர், அன்புகார்த்திகேயன், பி.பிரபாகரன், ஜி.எம்.பாலாஜி, கே. தேவேந்திரன், கே.தினேஷ் , சு.வெங்கடேஷ், ஆர்.சங்கர், எஸ்.அசோக், எஸ். சத்யா, எஸ்.சுனிதா, பி.சம்பத் , எம்.சங்குமார், ஆர்.சுரேஷ்குமார் கே.ராஜசேகர், பி.பிரகாஷ், எல்.பாலாஜி ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தொடர் நிகழ்ச்சியாக கோவை வடக்கு மாவட்டம் ஆர்.எஸ். புரம் பகுதிக்கழகம் வார்டு எண் 72க்கு உட்பட்ட வெட்டர் பர்ன் பேட்டை மாநகராட்சி நடு நிலைபள்ளியில் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொ.அ.ரவி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் பள்ளி வளாகத்தில் மரக்கன்று நட்டு வைத்தும், ஏழை எளிய மக்களுக்கு 500 பேருக்கு மதிய உணவு வழங்கினார், ஆர்.எஸ். புரம் பகுதிக்கழக செயலாளர் கார்த்திக் செல்வராஜ் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முருகன் கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் பரமசிவம் வட்டச் செயலாளர் ஜெகதீஷ், பகுதி நிர்வாகிகள் நாசர், புலவர் பழனிசாமி, ஆறுச்சாமி, முருகானந்தம், மகேஸ்வரன், ஆல்வின் விக்னேஷ், நித்திய சங்கர், சேகர், செந்தில், சிவகுமார், உதயகுமார், பாஷா, தினகரன், பாண்டியராஜன், ஜெயபிரகாஷ், ஆறுமுக நயினார், சி.டி.டி. பாபு, சாதிக், விஜயகுமார், சம்பத், பழக்கடை கோவிந்தராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.